# கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட அலகு ரீதியிலான கையேடு

## இந்து நாகரிகம் (46)
## புதிய பாடத்திட்டம்
## க . பொ .த உயர்தரம்

**கடந்த கால வினாக்களும் ,எதிர்பார்க்கப்படும் வினாக்களுடன் கூடிய விரிவான விடைக்குறிப்புக்களும்**

**அலகுகள் :**

**1.நாகரிகம் –பண்பாடு**

**2.உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் வகிபங்கு**

## தரம் : 12

**(அலகுப் பரீட்சையாகவும் பயன்படுத்தக் கூடியது)**

தொகுப்பு :
“இந்து தர்மாசிரியர் ,இ.சைவப் புலவர் “
திரு த . அருச்சுவன்
ஆசிரியர் (S.L.T.S),B.A(pera),N.D.T
National Diploma in Teaching (Merit)
Spl.in Hinduism & Tamil (Jaffna)
RESOURCE BT/ZON

**பாடம் :இந்து நாகரிகம்- 46 (Hindu Civilization)**

**தரம் : க.பொ.த (உ/த) -12**

**தவணை : 1**

**விடயம் : நாகரிகம் – பண்பாடு**

**மாணவர் பெயர் : .........................................................**

## பகுதி - 1

**மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க**

1.பண்பாடு என்பதற்கு மிகப் பொருத்தமான கூற்று

1. வாழ்வியலுக்கு மனதினைப் பண்படுத்தல்
2. மனித வரலாற்றில் பண்பாட்டின் உயர் எல்லையைக் காட்டுவது
3. இந்து சமூகத்தின் உறுப்பினரின் அறிவு நலமானது
4. நாகரிகத்தை பிரதிபலிப்பது
5. இந்துப் பண்பாட்டின் அடித்தளம் வேதமாகும்

2) “**Culture**” எனும் ஆங்கிலச் சொல்லுக்கு முதன் முதலில் பண்பாடு எனும் பதத்தைப் பிரயோகித்தவர்

1. எட்வேட் ரெயிலர் 2.T.S.எலியட் 3.வையாபுரிப்பிள்ளை
4.ரி.கே.சிதம்பரநாத முதலியார் 5. டாக்டர் ராதாகிருஸ்ணன்

3) ” **Civilization”** எனும் சொல் உருவான மொழி

1.ஆங்கிலம் 2.இலத்தின் 3.வடமொழி
4.போர்த்துக்கேய மொழி 5.ஒல்லாந்த மொழி

4)பண்பாட்டிற்கும் சமயத்துக்குமான நெருங்கிய தொடர்பு பற்றிக் குறிப்பிட்டவர்

1.எட்வேட் ரெயிலர் 2.T.Sஎலியட் 3.வையாபுரிப்பிள்ளை
4.ரி.கே.சிதம்பரநாத முதலியார் 5. டாக்டர் ராதாகிருஸ்ணன்

5) “**Culture**” என்பதன் பொருள்

1.நாகரிகம் 2.பண்பாடு 3.மதம் 4.இனம் 5.மொழி

6) “நாகரிகம் “ (Civilization) எனும் சொல் உருவான அடிச் சொல்

1.Civitas 2.Citizen 3.Civil 4.Civiliz 5.Civilization

7) “பண்பாடு” என்பதுடன் தொடர்புடைய தொகுதி
1.இலத்தின்,ரி.கே.சிதம்பரநாத முதலியார்
2.அரபு, திருமூலர்,யுவாங்சுவாங்
3.ஜப்பானிஸ்,நீலகண்ட சாஸ்திரி
4.ஒல்லாந்து , டி . மோகன் , பிளினி
5.போர்த்துக்கேயம் , இராமநாதன் , மெகஸ் தனிஸ்

8) பழந்தமிழ் இலக்கியங்களில் “**சால்பு**” எனும் பதத்தால் உணர்த்தப் படுவது
1.விழுமியம் 2.கலாசாரம் 3.சமயம் 4.நாகரிகம் 5.பண்பாடு

9) பண்பாட்டையும் அதன் மீட்டுருவாக்கத்தையும் தீர்மானிக்கும் பிரதான காரணியாக சமயம் விளங்குகின்றது எனக் கூறியவர்
1.மாக்கே 2. T.S.எலியட் 3.சேர் . ஜோன் . மார்ஷல்
4.வில்லியம் ஜோன்ஸ் 5.அலெக்ஸ்சாண்டர்

10)இந்துப் பண்பாட்டு வரலாற்றில் கூடுதலாக மேலோங்கி நிற்கும் வரலாறு
1.அரசியல் வரலாறு 2.சமுக வரலாறு 3.சமய வரலாறு
4.கலாசார வரலாறு 5.பொருளாதார வரலாறு

( 10x1=10 புள்ளிகள் )

## பகுதி – 2

***பின்வரும் வினாவிற்கு விடை தருக***

*01* ***“முந்தையிருந்து நாட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்“ எனும் கூற்றுக்கமைய நாகரிகம் - பண்பாடு தொடர்பாக மேல் வரும் விடயங்களை ஆராய்க***

அ) பண்பாடு – நாகரிகம் என்பவற்றுக்கு இடையிலான பாகுபாடு
ஆ)பண்பாடு பற்றிய அறிஞர்களது கருத்துக்கள்
இ) பண்பாட்டிற்கும் சமயத்திற்குமிடையிலான தொடர்பு
ஈ) நாகரிகம் என்பதன் வரையறையும், பண்பாடும் நாகரிகமும் ஒன்று என்ற கருத்து நிலையும்

( 10 புள்ளிகள்)

**பாடம் :இந்து நாகரிகம்- 46 (Hindu Civilization)**
**தரம் : க.பொ.த (உ/த) -12**
**தவணை ; 1**
**விடயம் : நாகரிகம் –பண்பாடு**
**விடைகள்**

**பகுதி -1**

| | | |
|---|---|---|
| **1.** | *1* | வாழ்வியலுக்கு மனதினைப் பண்படுத்தல் |
| **2.** | **4** | ரி .கே .சிதம்பரநாத முதலியார் |
| **3.** | **2** | இலத்தின் |
| **4.** | **2** | T.Sஎலியட் |
| **5.** | **2** | பண்பாடு |
| **6.** | **1** | Civitas |
| **7.** | **1** | இலத்தின்,ரி.கே.சிதம்பரநாத முதலியார் |
| **8.** | **5** | பண்பாடு |
| **9.** | **2** | T.S.எலியட் |
| **10.** | **3** | சமய வரலாறு |

## பகுதி -2

## 01)

### அ) பண்பாடு –நாகரிகம் என்பவற்றுக்கு இடையிலான பாகுபாடு

இந்து சமயத்திலும், சமூகத்திலும் இணைத்துப் பேசப்படுவதே நாகரிகம்,பண்பாடு என்னும் இவ்விரு சொற்களாகும். சில அறிஞர்கள் இவ்விரு சொற்களும் வேறுபாடற்ற பொருளையே சொல்கின்றது என வாதிடுகின்றனர். இன்னும் சில அறிஞர்கள் இவ்விரண்டு சொற்களுக்குமிடையில் நுட்பமான வேறுபாட்டை காண முயன்றுள்ளனர் இது மேல்வருமாறு நுணுகி ஆராயும் போது புலப்படுகிறது

| பண்பாடு | நாகரிகம் |
|---|---|
| | |
| • குறித்த நாட்டவர் நாகரிகத்தைத் தேர்ந்தெடுப்பது பண்பாடு. | நாகரிகம் நாட்டுக்கு நாடு வேறுபடும். (உ-ம் : சிந்துவெளி,எகிப்து, கிரேக்கம்). |
| • இயங்கிக் கொண்டிருக்கும் சமூகத்தை மாற்றியமைப்பது பண்பாடு. | சமூகத்தை இயக்குவது. |
| • பண்பாடு மெதுவாக வளரும். | வேகமாக வளரும் தன்மையது |
| • பண்பாட்டின் முதிர்ச்சி நிலையே நாகரிகம். | பண்பாட்டைத் தொடர்வது நாகரிகம் |
| • பண்பாட்டை இலகுவாக பின்பற்றவோ கடைப்பிடிக்கவோ முடியாது | நாகரிகத்தை இலகுவாகப் பின்பற்றலாம், கடைப்பிடிக்கலாம் |
| • மனிதரின் அகவய நடத்தையே பண்பாடு. | மனிதரின் அகவய, வெளிப்புற நடத்தையே நாகரிகம். |
| • செயலுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு பயனுக்கு முதன்மை அளிக்காது | செயலுக்கும் பயனுக்கும் முதன்மை அளிக்கும் |
| • பண்பாடு மனிதனைச் செதுக்கும். | நாகரிகம் மனதைச் செதுக்கும். |
| • மனிதனுக்கு நாகரிகத்தை விட பண்பாடு இன்றியமையாதது. | நாகரிகம் இல்லாமலும் மனிதனால் வாழ இயலும். |
| • உள்ளத்தின் செம்மை | உள்ளத்திற்கு புறம்பான உணவு உடை உறையுள் முதலியவற்றின் செம்மை |
| • பண்பாடு திருந்திய ஒழுக்கம் | நாகரிகம் திருந்திய வாழ்க்கை |
| • எல்லாப் பொருட்களையும் தமக்கும் பிறருக்கும் பயன்படுத்துவது | எல்லாப் பொருட்களையும் தமக்கே பயன்படுத்துவது |
| • ஒத்த எண்ணமுடையவர்கள் பண்பாட்டை விளக்குவர் | வேறுபட்ட சமூகங்கள் நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளுவர் |

### ஆ) *பண்பாடு பற்றிய அறிஞர்களது கருத்துக்கள்*

இந்துப் பண்பாட்டு வரலாற்றில் அரசியல் வரலாறு, பொருளாதார வரலாறு என்பவற்றை விட சமய வரலாறே கூடுதலாக மேலோங்கி நிற்கின்றது. பண்பாட்டுப் பகிர்வால் சமய நெறிகளும் தத்துவக் கோட்பாடுகளும் பல்கிப் பெருகியுள்ளன.

ஆங்கிலத்தில் **"Cult"** என வரும் சொல் ''**வழிபாடு"** என்ற அர்த்தத்தை தருகின்றது இவ் வழிபாடே பண்பாட்டிற்கு மூலம் என்பர். ஆங்கிலத்தில் நேரடியாக வரும் ''**culture"** என்பது **"பண்பாடு''** என்ற சொல்லாடலையே தருகின்றது. எனவே பண்பாடு என்பது சமய நிகழ்ச்சிகள், ஆசாரம், சாதனைகள் என்பவற்றிலிருந்து தோன்றியவையாக கருத முடிகின்றது.

பண்பாடு என்பது பண்படுவது, பகிர்ந்தளிப்பது, பண்படுத்தல், சீர்படுத்தல் , பண்ணுதல் அல்லது திருத்துதல் எனப் பல பொருள் அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றது.
(உ-மாக)

பண்ணுதல் -- ''நிலத்தைத் திருத்துதல்''
(பண்பட்ட மருத நிலம் - பண்ணை)
திருத்துதல் -- ''திருந்திய உள்ளம்''
பண்படுத்தல் -- ''பண்பட்ட செந்தமிழ்'' எனறு கூறுவது வழக்கம்.

**culture** (பண்பாடு) எனும் ஆங்கிலச் சொல், இலத்தீன் சொல்அடியிலிருந்து தோன்றியது. வாழ்வியலுக்கு மனதினைப் பண்படுத்தல் பண்பாடு ஆகும்.

**Culture** என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு **ரி. கே. சிதம்பரநாத முதலியார்** பண்பாடு என்னும் பதத்தை முதன்முதலில் பிரயோகித்தார். இதன்படி பயிரிடுவதற்கு ஏற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் ''நன்செய்'' நிலமாகும். அதுவே பண்படுத்தப் பட்ட நிலமாகும்.என்று சொல்லப்படும். இது ஆங்கிலத்தில் "Cultivated Land " எனப்படுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு பக்குவப்பட்ட மனிதனையும், பண்பட்ட மனிதன் என்போம் பண்பட்ட உளமுடையவரை பண்பாடு உடையவர் என்போம். இச் சொல் நற்பழக்கவழக்கங்களை மேற்கொண்டு வாழ்க்கையை செம்மைப்படுத்தல் என்ற பொருளிலும் வருகின்றது. ஆயினும், பழந்தமிழ் இலக்கியங்களில் சால்பு என்ற பதம் இதனைச் சுட்டுவதாகவே உள்ளது.

மேலும், பண்பு, பண்புடைமை, சான்றாண்மை முதலிய சொற்களாலும் பண்பாடு என்பது தமிழர் மரபில் சுட்டப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது.
இச் சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பொருள்களைக் குறித்தாலும், பல இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது.
"பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்"– **(கலித்தொகை),**
"பண்புடையார் பட்டுண்டு உலகம்"– **(திருக்குறள்)** என வருவதாற் காணலாம்.

**‘பண்பாடு’** எனும் தமிழ்ச் சொல் அமைந்திருக்கும் முறையின்படி நோக்கினால், **“பண்”** என்ற வினையடியையும் **“பாடு”** என்ற தொழிற்பெயர் விகுதியையும் கொண்டு உருவான சொல்லே இது. **“பண்ணு”–** என்பது செய்தல் என்பதைக் குறிக்கும். இவ்வழி, **“குறித்த ஓர் இனமோ சமுதாயமோ தனது அறிவாலும் அனுபவத்தாலும் சிந்தனைத் திறத்தாலும் தனக்கென வகுத்துப் பேணிவரும் செயற்பாடே பண்பாடு” எனலாம்.**

பண்பாடு என்பது யாது? என்பது தொடர்பில் திட்டமான வரைவிலக்கணத்தை முன்வைப்பது கடினம். மாறும் நிலையுடைய மனிதனை அடிப்படையாகக் கொண்டது பண்பாடு என்பதால், திட்டமான வரைவிலக்கணத்தை முன்வைப்பதில் சிக்கல் நிலவுகிறது.

ஆயினும் அறிஞர் பெருமக்கள் தம் அறிவு நிலைக்கு ஏற்ப பண்பாடு என்பதற்குப் பல வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் பண்பாடு எனும் எண்ணக்கருவை நாம் ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.

• **சமூக அறிஞர்களின்** (Social Scientists) கருத்துப்படி,**“**பண்பாடு என்பது வாழ்க்கை முறை**”** (way of life)

• **S.வையாபுரிப்பிள்ளை** –culture என்பது ஆங்கிலத்தில் இரண்டு பொருள்களில் வழங்கப்படுகிறது. என்றார்
ஒன்று மக்களின் ஆதி வரலற்றில் ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியன வெளிப்படுத்தும் அறிவு நிலை.
மற்றயது Culture என்பது ஒரு பொதுப் பொருள். மக்களின் அறிவு நலம், கருத்து நலம், குண நலம், ஒழுக்க நலம் முதலியன மென்மேலும் திருந்துகின்ற நிலை.

• **E.P. Tylor**–குறித்த ஓர் இனமக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், நடத்தைகள் என்பவற்றை உள்ளடக்கியதே பண்பாடு.

• **Malinowsky–** பண்பாடு என்பது ஓர் இனத்தின் பாரம்பரியமான பயன்பாட்டுக் கருவிகள், பொருள்கள், தொழில்நுட்பத் திறன்கள் என்பவற்றின் கூட்டு மொத்தமே ஆகும். இது மக்களால் ஆக்கப்பட்ட கருவி எனக் குறிப்பிடுகிறார்.

• **வள்ளுவர்** - பிறர் மேல் அன்புடைமை, உலகத்தோடு இணைந்த குடியிலே பிறத்தல் ஆகிய இவ்விரண்டும் ஒத்து வருதலே பண்புடைமை என உலகத்தார் சொல்லுவர் என்கிறார்.

**“அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு”** (குறள்-992)

• **தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்** - ''....பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாடே பண்பாடு என்கின்றோம். வாழ்வின் பல பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப்பண்பாடென்பது குறிக்கும் உடல், மனம் பற்றிய தூய்மை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்.'' என்றார்.

• **எட்வாட் பர்னாட் டைலர்** - ''பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்க வழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுதியாகும்.'' என்கிறார். அத்தோடு ஒரு சமூகத்தின் உறுப்பினரின் அறிவு நலம், கருத்து நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம் ஆகியவை மென்மேலும் திருந்திய ஒரு நடைமுறையே பண்பாடு ஆகும் எனவும், பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கம் என்பவற்றின் முழுமைத் தொகுதியாகும் எனவும் கூறுகிறார்.

- **மாத்யூ ஆர்னால்டு**

**''**ஒருவன் தன் குண நலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் நிலை பண்பாடு ஆகும்'' ''மக்களின் பழைய வரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், சமூகப்பழக்கவழக்கம், நம்பிக்கை, சமயம் முதலியவற்றைப் பண்பாடு எனற சொல்லால் குறிக்கின்றனர்''

- **அறிஞர்.பாவாணர்**

**''**நிலத்திற்கும் உள்ளத்திற்கும் தொடர்பு உண்டு. இதனை அறிந்த தமிழர்கள் இவை இரண்டையும் **''நில புலன்''** என்று இணைத்துப் பேசுவர். புலவர்கள் மக்கள் உளம் என்னும் நிலத்தைப் தம் கவிதை ஏர் கொண்டு உழுது அறிவு விதைகளைத் தூவிப் பண்பாட்டுப் பயிரை வளர்க்கும் உழவராவர். இங்கு **சீர்படுத்தல்** எனும் பொருள் **பண்ணுதல்** எனும் சொல்லால் ஆளப்படும்''

- **கோபாலக் கிருஷ்ண ஐயர்**

**''**ஒர் இனத்தின் பண்பாாடு இலக்கியம், வரலாறு, சமயம், சமூகம், கலை, அறிவியல் முதலியவற்றால் அறியப்படுகின்றது. எனவே பண்பாடு மனித வாழ்க்கையின் ஆணிவேர்.''

- **மேல்நாட்டறிஞர் ஒருவரின் கருத்து**

**''**மக்கள் அறிந்தவற்றுள்ளே மேன்மையானவற்றாலும் சிறந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் பண்பாட்டின் தன்மை அறியப்படுகின்றது.''

இவற்றின் அடிப்படையில் பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் கற்று அறியப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றது.அகத்தோற்றப்பாட்டின் பண்பினை வளர்க்கும் செயற்பாடுகள் அனைத்தும் பண்பாடு எனும் எண்ணக்கருக்குள்ளேயே அடங்குகின்றன எனலாம்.

## இ) பண்பாட்டிற்கும் சமயத்திற்கும் இடையிலான தொடர்பு

• பண்பாட்டில் உள்ளடங்கும் கூறுகளில் சமயம் பிரதான இடத்தைப் பெறுகிறது. அந்த வகையில் பண்பாட்டிற்கும் சமயத்திற்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இவற்றை மேல்வரும் அறிஞரின் கருத்தினூடாக நோக்கலாம்.

• **T.S.** எலியட்டின் கூற்று
பண்பாட்டின் அமைப்பையும் மீட்டுருவாக்கத்தையும் தீர்மானிக்கும் பிரதானகாரணியாக சமயம் விளங்கும். இந்துப்பண்பாடு, இந்துக்களின் மரபுவழியான வாழ்வியலுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கின்றது.

1. பண்பாட்டு மரபுகள்
2. பண்பாட்டு வாழ்வு

இவை இரண்டும் இந்துப் பண்பாட்டில் பிரதானமானவையாகும். இந்து விழுமியப்பண்புகளை நூல்களில் இருந்து கற்பது பற்றியும் அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பது பற்றியும் இந்துப்பண்பாடு வலியுறுத்துகின்றது.

• வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், பன்னிரு திருமுறைகள், ஆழ்வார் பிரபந்தங்கள் அனைத்தும் இந்துக்களைப் பண்படுத்தும் இந்து சமய நூல்களாகவே அமைந்துள்ளன. சமய நம்பிக்கை. இறைநம்பிக்கை, கலை உணர்வு என்பவற்றை அவ்விலக்கியங்கள் வெளிப்படுத்தும்.

• இவ்வாறு நோக்குகையில் இந்து ஒருவரால் இந்து சமூகத்திற்கு கையளிக்கும் மரபுகள், இந்து சமூகம் தனி ஒருவருக்காக ஒப்படைக்கும் அம்சங்கள் பண்பாட்டில் பிரதானமானதாக இடம் பெறும்.

## ஈ) நாகரிகம் என்பதன் வரையறையும், பண்பாடும் நாகரிகமும் ஒன்று என்ற கருத்து நிலையும்

- மனித வரலாற்றில் பண்பாட்டின் உயர் எல்லையைக் காட்டுவது நாகரிகம்

- நாகரிகம் என்பது ஆங்கிலத்தில் **'CIVILIZATION'** எனப்படுகிறது. இது **CITIZEN** என்னும் சொல்லில் இருந்து உருவானது. **CITIZEN** என்பது **"CIVITAS"** எனும் இலத்தீன் சொல்லில் இருந்தே தோன்றியது. இது "நகரம்" எனும் பொருள் கொண்டது.

- நகர மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பது நாகரிகமாகும். இதனை **நகர்+அகம்** எனப் பிரித்து நோக்கலாம். இதன்படி நாகரிகம் என்பது நகரத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம். ஆதன்படி, நாகரிகம் என்பது **“**நகர மக்களின் திருந்திய வாழ்க்கை**”** எனப்படுகிறது.

- நகரிகம் என்ற சொல் **‘**நகரம்**’** என்ற சொல்லின் திரிபு. நகர் + அகம் = நகரம் என்றும் நகரிகம் என்றும் நாகரிகம் எனவும் திரிபடைந்து வந்ததாக அறிஞர் **பாவாணர்** குறிப்பிட்டுள்ளார். இவரின் கருத்துப்படி, எல்லா நாட்டிலும் மாந்தர் முதன்முதலில் நகர நிலையிலேயே நாகரிகம் அடைந்துள்ளனர். இதனால், நகரப் பெயரில் இருந்து நாகரிகப் பெயர் தோன்றியுள்ளது என்கிறார்.

- நாகரிகம் என்பது தமிழுக்குப் புதிய சொல்லன்று. இது ஏறக்குறைய 2000 ஆண்டுகள் பழைமையுடையது.

➢ **இலக்கியச் செய்திகளில் நாகரிகம் பற்றிய எண்ணக்கரு**

- நகரங்கள் தோன்றுவதற்கு மருத நிலத்தில் தோன்றிய உழவுத் தொழிலும் நிலையான குடியிருப்பும் ஊர்ப்பெருக்கமும் காரணமாக அமைந்தது. உழவுக்குடிமகனே இல்வாழ்வான் ஆனான். பின்பு இல்வாழும் இடத்தை **வளமனை** என்றும் பின்பு அது **அரசமனை, கோயில், நகர், நகரி, நகரம்** என்ற சொற்களால் வழங்கப்பட்டன என இலக்கிய சான்றுகள் இயம்புகின்றன.

- நகர் என்னும் சொல் முதன் முதலில் ஒரு **வளமனை** (மனைவி) குறித்து வருவதனை சங்கப்பாடல் கூறுகிறது
  (எ-கா)
  ‘‘கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்’’**- புறநானூறு**
  ‘‘ வருவிருந்தோம்பித் தன்னகர் விழையக் கூடி’’ – **கலித்தொகை**

- நகர் எனும் சொல் **அரண்மனையை** குறித்துள்ளது
  (எ-கா)
  ‘‘முரைகெழு செல்வர் நகர்’’ – புறநானூறு

- நகர் எனும் சொல் கோயிலைக் குறித்துள்ளது
  (எ-கா)
  ‘முக்கட் செல்வர் நகர் வலஞ்’’ - புறநானூறு

- சங்க இலக்கியமான **நற்றிணையில்** **‘**நாகரிகம்**’** எனும் சொல் காணப்படுகின்றது. இதனை,**“முன்னை இருந்து நாட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்”**என வருவதால் அறியலாம்.

- இக்கருத்தினை பின் வந்த வள்ளுவரும்,

  **“பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க**
  **நாகரிகம் வேண்டுபவர்”** (குறள்- 580)
  என நாகரிகம் பற்றிக் மிகத தெளிவாக குறிப்பிட்டுள்ளமை எடுத்துக்காட்டத்தக்கது.

- நாகரிகம் என்பது மாந்தனது புறத் தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறித்து நிற்கும். அதாவது, மனிதன் தன் அறிவுத் திறத்தாலும் ஆற்றலாலும் உள்ளுணர்வுத் திறத்தாலும் பேணி வளர்த்து வரும் சுவையான உணவு, அழகான உடை, வசதியான உறையுள், வாய்ப்பான போக்குவரத்து சாதனங்கள்,வளம் மிகுந்த நாடு, நலம் மிகுந்த நகரங்கள், கல்விச் சாலைகள், கலைக் கூடங்கள், வனப்பான பூஞ்சோலைகள், விளையாட்டு, இசை, நாடகம், கூத்து, நாட்டியம் ஓவியம், சிற்பம் போன்ற கலையம்சங்கள் முதலியவைகள் எல்லாம் மனிதனது புறத்தோற்றப்பாட்டுக் கொள்கையைக் குறித்து நிற்கும். இவை நாகரிகத்தின் பாற்பட்டவை. இவ்வாறான நாகரிகக் கூறுகளை நாம் கண்ணால் காணவும் முடியும். தொட்டு உணரவும் முடியும்.

- நாகரிகம் என்பது “நகரத்தோடு இணைந்தது” என்ற அடிப்படையில், பண்பாட்டு அம்சங்களுடனான உணவு, உடை, வீடு என்பவற்றை வசதியோடும் அழகுணர்வோடும் ஆக்கிப் பயன்படுத்தல், நகர அமைப்பைத் தேவைக்கு ஏற்பவும் சுவை உணர்வுக்குப் பொருத்தமாகவும் அமைத்தல், பிறரோடு நல்ல முறையில் பழகுதல், உள்ளத்தோடு உடலையும் தூய்மையாக வைத்திருத்தல், சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளல், போக்குவரத்துக்கான ஊர்திகளை அமைத்தல், பொருளாதாரம். அரசியல் நீதி நிருவாகச் செயற்பாடுகளை செம்மையாக அமைத்துக் கொள்ளல் எனப் பல்வேறு விடயங்கள் நாகரிகத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன.

➢ **நாகரிகம் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்**.

- **டாக்டர் இராதாகிருஷ்ணன்** - நாகரிகம் என்பது “ஒரு நாட்டின் விழுமியக் கருத்துக்களை வழிவழியாகப் பேணிப் பாதுகாக்கும் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெற்றதே ஆகும்” என்றார்.

- **ஆடம் /பெர்கூஸன்** (Adam Ferguson) An Essay on the History of Civil Society (1767) –நாகரிகம் என்றால்,“தனிமனிதன் குழந்தைப் பருவத்திலிருந்து மனிதத் தன்மை உடையவனாக வளர்ச்சி அடைவது மட்டு மல்லாது, மனித இனமே முரட்டுத்தனத்திலிருநது் பண்பாட்டுக்கு முன்னேறுவது ஆகும்.” என்றார்.

- **ஆல்பர்ட் ஸ்விட்சர்** (Albert Schweitzer) –**“**நாகரிகம் என்பது எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் எந்தச் செயல்கள் மனித ஆன்மாவைச் செம்மைப்படுத்துகின்றனவோ அவற்றின் ஒட்டு மொத்த முன்னேற்றம் ஆகும்.’’ என்றார்.

## ➢ பண்பாடும் நாகரிகமும் ஒன்று என்ற கருத்து நிலை

அகவயமாகத் திகழும் பண்பாட்டையும் புறத் தோற்றப்பாடான நாகரிகத்தையும் அறிஞர் பலர் இரண்டும் ஒன்று எனவும் சிலர் வேறானது என்றும் பார்க்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இவ்விரு அம்சங்களையும் ஒன்றாக நோக்கும் அறிஞர்கள், அக வளர்ச்சியின் வெளிப்பாடாகப் புற வளர்ச்சி அமைவது போல பண்பாட்டின் வளர்ச்சி நாகரிகம் என்கின்றனர். இதனால் இவ்விரு அம்சங்களையும் ஒன்றென நோக்க வேண்டியுள்ளது.

- சங்கப் புலவர்களும்,திருவள்ளுவரும் பண்பாட்டை நாகரிகம் என்றே குறித்துள்ளனர்.பகைவர் மனமும் புண்பட்டு வருந்தலாகாது எனறு எண்ணிக் கண்ணோட்டத்தோடு வாழ வேண்டும் என்கின்றார் வள்ளுவர்.
  **“பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க**
  **நாகரிகம் வேண்டுபவர்”** (குறள்-580)

- நற்றிணை நூலின் பாடலொன்றில்
  **“முன்னை இருந்து நாட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்”** என்பதிலும் அதே கருத்தினையே கூறியிருக்கின்றது.

  எனவே பண்டைய தமிழர்கள் அகப்பண்பாட்டையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை என்பது புலனாகின்றது இதனை மேல்வரும் அறிஞர்களின் கூற்றுக்களும் தெளிவுபடுத்துகின்றது

  **டாக்டர்.எஸ் இராதாகிருஷ்ணன்** கூறும் கருத்துப்படி பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ண்டு எழுச்சி பெறுவதே நாகரிகம் என்பதனை ‘‘நாகரிகம் என்பது ஒரு நாட்டின் மனிதத்தன்மையை அந்த நாட்டின் விழுமிய கருத்துக்களை வழிவழியாகப் போற்றிக் காக்கப்படும் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.’’ எனக் கூறியுள்ளார்.

  **டாக்டர்.எம்.ஜி. முத்துக்குமார சுவாமி**
  ‘‘இந்திய நாகரிகத்தின் மேன்மையைப் பிறநாடுகள் நன்கு புரிந்து கொள்ள வேண்டுமெனின் தென்னிந்திய நாகரிகம் அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டு நாகரிகம் உணர்த்தப்படுதல் வேண்டும்’’

  பண்பாடு நாகரிகத்திலும் சிறந்ததாயினும்,நாட்டிலும் நகரிலும் கூட்டு வாழ்க்கையில் வாழ்பவர் நாகரிகமின்றியிருத்தல் கூடாது. கூட்டு வாழ்க்கையில் நாகரிகமின்றி இருப்பவர்களுக்குப் பண்பாடு இருத்தல் முடியாது.

ஆனாலும் உண்மையில் இவை இரண்டும் ஒற்றுமையில் வேற்றுமை கொண்ட இரு எண்ணக்கருக்கள் என்றே கூறவேண்டும் இவ்விரண்டும் ஒன்றில் ஒன்று தொடர்பு கொண்டவையாயினும் வேற்றுமையும் உள்ளது. இது நுணுகி ஆராயும் போது நன்கு புலப்படும்.

## கடந்த காலங்களில் இடம்பெற்ற வினாக்களும் அதன் விடைகளும்

## அலகு - நாகரிகம் - பண்பாடு

பகுதி 1

1.“பண்பாடு” என்ற பதத்திற்குப் பழந்தமிழ் இலக்கியங்களிற் சுட்டப்படும் சொல்
1.மரபு 2.சால்பு 3.கலை 4.தத்துவம் 5.ஒழுக்கம்

**வினா இலக்கம் 02 (2017)**

**விடை**

2.சால்பு

2. “.நாகரிகம்” என்ற சொல் முதன்முதல் இடம்பெறும் தமிழ் நூல்
1.நன்னூல் 2.திருமந்திரம் 3.நற்றிணை 4.மணிமேகலை 5.திருக்குறள்

**வினா இலக்கம் 03 (2013)**

**விடை**

5.திருக்குறள்

**பாடம் :இந்து நாகரிகம்- 46 (Hindu Civilization)**

**தரம் : க.பொ.த (உ/த) -12**

**தவணை ; 1**

**விடயம் : உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் வகிபங்கு**

**மாணவர் பெயர் : ..........................................................**

**பகுதி - 1**

- ***மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க***

1. இந்து நாகரிகமானது எத்தனை ஆண்டுகள் பழமையானது
   1. 2000 2. 5000 3. 2500 4. 10000 5. 1500

2. அரசியல் பற்றி சாத்திரமயப்படுத்தப்பட்ட மூல நூல்
   1...சிற்ப சாத்திரம் 2. பரதநாட்டிய சாத்திரம் 3. அர்த்த சாத்திரம்
   4. அரசியல் சாத்திரம் 5. இராஜ சாத்திரம்

3. "கடமையை செய்; பயனை எதிர்பாராதே" என்பதன் முலம் உணர்த்தப்படுவது
   1. கடமையை செய்யாதே 2. பயன் கிடைக்காது 3. கடமைக்கு முக்கியத்துவம்
   4. பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் 5. . பயன் கருதும் கடமைக்கு முக்கியத்துவம்

4. இந்து நாகரிகமானது மானிட ஆற்றலை விட சிறந்தது என எதனைக் கூறுகிறது
   1.அறிவாற்றல் 2. கலையாற்றல் 3. கல்வியாற்றல்
   4. தொழில்நுட்ப ஆற்றல் 5. இறையாற்றல்

5. பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்து நாகரிகம் பணிவான தொண்டை உயர் தொனியாக குறிப்பிடும் பாடல் அடி
   1."என் கடன் பணி செய்து ......" 2. "தோடுடைய செவியன் ......."
   3."யாமார்க்கும்குடியல்லோம்...." 4." அம்மையேஅப்பா ...." 5. சிவசிவஎன்கிலர் ...."

6. பல்பண்பாட்டு சங்கமத்தை எடுத்துக் காட்டும் இந்து நாகரிகத்தின் பெருமைக்கு சான்று
   1. வடமொழிக்கலாசாரம் ,தமிழ்க்கலாசாரம் என்பவற்றின் பிணைப்பு
   2. வடமொழிக்கலாசாரம், சமஸ்கிருத கலாசார பிணைப்பு
   3. தமிழ் மொழிக்கலாசரம் , ,தமிழ்க்கலாசாரம் என்பவற்றின் பிணைப்பு
   4. தமிழ் மொழிக்கலாசரம் ,சைவ கலாசார பிணைப்பு
   5. வடமொழிக்கலாசாரம், இந்து கலாசார பிணைப்பு

7. வைதிக நெறியின் அடிப்படையில் இந்து நாகரிகம் எவற்றைப் பிரதானமாக ஏற்று வாழ்கிறது

1.பழமை , புதுமை  2. மொழி ,சமயம்  3. இனம் ,மொழி

4.இறையுண்மை ,இறை நம்பிக்கை  5. நாகரிகம் ,பண்பாடு

8. இந்து நாகரிகம் வாழ்வியல் தருமத்தை வாழ்க்கை விதிகளாக எடுத்துக்காட்டியுள்ளமைக்கு சான்றுகள்

1. இல்லறவாழ்வு  2. சமய வாழ்வு  3. ஆச்சிரம தர்ம வாழ்வு ,புருடார்த்தங்கள்

4. ஆச்சிரம தர்ம வாழ்வு ,வர்ணாச்சிரம கோட்பாடு

5.வாழ்க்கைப் படிநிலைகள் ,உலகியல் வாழ்வு

9. இந்து நாகரிகம் உலகளாவிய பெருமையுடன் விளங்கக் காரணம்

1. அறிவியல் ,வானியல் ,வைத்தியம் முதலிய துறைகளையும் உள்ளடக்கி இருப்பது
2. இறையுண்மை ,இறைநம்பிக்கை ,இறையாற்றல் என்பவற்றைக் கூறுவது
3. அறம் ,பொருள் ,இன்பம் ,வீடு என்பவற்றுக்கு வழிகாட்டுவது
4. பிரமச்சரியம் ,கிருகஸ்தம் ,வானப்பிரஸ்தம் ,சந்நியாசம் எனும் படி நிலைகளைக் கொண்டிருத்தல்
5. நாகரிகம் ,பண்பாடு என்பவற்றைக் கூறுதல்

10. குறைவிலாது உயிர்கள் வாழ வழிகாட்டும் சைவ நீதிக் கருத்துக்களுள் பிரதானமானது

1. 'இந்துவாக வாழ்வோம் இந்துதர்மம் காப்போம்........... "
2. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் .........."
3. 'வான் முகில் வழாது பெய்க .........."
4. உலகெலாம் உணர்ந்து ............."
5. வேத நெறி தளைத்தோங்க ....."

(10 புள்ளிகள் )

**பகுதி - 2**

**பின்வரும் வினாக்கு விடை தருக**

**01) "உலகின் பல்வகை நாகரிகங்களிலே தனித்துவமும் சிறப்பும் மிக்கது இந்து நாகரிகமே "** எனும் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல் வருவனவற்றை தெளிவுபடுத்துக

அ) இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்கள்

ஆ ) உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் பரவல்

(10 புள்ளிகள் )

**பாடம் :இந்து நாகரிகம்- 46 (Hindu Civilization)**
**தரம் : க.பொ.த (உ/த) -12**
**தவணை :1**
**விடயம் : உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் வகிபங்கு**
**விடைகள்**

## பகுதி -1

| | | |
|---|---|---|
| **1.** | **2** | 5000 |
| **2.** | **3** | அர்த்த சாத்திரம் |
| **3.** | **4** | பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் |
| **4.** | **5** | இறையாற்றல் |
| **5.** | **1** | "என் கடன் பணி செய்து ......" |
| **6.** | **1** | வடமொழிக்கலாசாரம் ,தமிழ்க்கலாசாரம் என்பவற்றின் பிணைப்பு |
| **7.** | **4** | இறையுண்மை ,இறை நம்பிக்கை |
| **8.** | **3** | ஆச்சிரம தர்ம வாழ்வு ,புருடார்த்தங்கள் |
| **9.** | **1** | அறிவியல் ,வானியல் ,வைத்தியம் முதலிய துறைகளையும் உள்ளடக்கி இருப்பது |
| **10.** | **3** | வான் முகில் வழாது பெய்க ..........“ |

## பகுதி – 2

## 01)

### அ) இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்கள்

- உலகில் தோன்றிய பல நாகரிகங்களில் இந்து நாகரிகம் தனித்துவமானது ஆகவே இந்து சமயம் என்னும் பெரு விருட்சமாகி வளர்ச்சி பெற்று உலகப் புகழ் பெற்றுள்ளது.அதனை முன்னோர் ‘‘சனாதன தர்மம்’’ என்று அழைத்தனர். அது ‘‘என்றும் வாழும் அறம்’’ என்ற பெயரையும் பெறுகிறது.

- இந்து நாகரிகம் இற்றைக்கு *5000* ஆண்டுகள் பழமையானது. தனக்குச் சம காலத்தில் தோன்றிய பிற நாகரிகங்களின் சுவடுகள் அழிந்து போக, கால தேச வர்த்தமானங்களைக் கடந்து இன்று வரை நிலைத்துள்ள சிறப்பு இந்து நாகரிகத்திற்கு உண்டு.

- உலகின் பல்வகை நாகரிகங்களிலே இந்து நாகரிகம் தனித்துவமானது; சிறப்புத்தன்மை வாய்ந்தது. அத்தகைய தனித்துவமான தன்மை காரணமாக இந்துமதம் இன்றும் புகழ் பெற்று விளங்குகிறது.

- வைதிகநெறியின் அடிப்படையில் இறை உண்மை, இறை நம்பிக்கை என்பவற்றை ஏற்று வாழ்தல்.இதனால் இந்து தர்மத்திற்கு ‘‘வைதீக மதம்’’என்ற பெயரும் உண்டு

- சகிப்புத் தன்மையையும், பொறுமையையும் மக்களுக்கு போதித்து மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்துகின்ற ஒரு சூட்சுமமான நெறி இந்து நாகரிகத்திற்கு மட்டுமே உள்ளது.

- **‘‘யாமறியோம் பராபரமே’’, ‘‘எல்லாம் அவன் செயல்’’** முதலிய அடியார்களின் கூற்றுக்கு அமைவாக மானுட ஆற்றலை விட இறை ஆற்றலே மேலானது என்னும் கருத்துக்கள் சிறப்புடையது.

- வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தேவரை அடைவதற்கு வாழ்வியல் தர்மத்தை வாழ்க்கை விதிகளாக எடுத்துக்காட்டியுள்ளமை. இதற்கு ஆச்சிரம தர்ம வாழ்வு, புருடார்த்தங்கள் என்பன சான்றாகும்.

- நாகரிகத்தின் பரிமாணங்களான சமூகம், சமயம், தத்துவம், கலை, அரசியல், அறிவியல் முதலானவற்றில் இந்து நாகரிகத்தின் சிறப்புக்களை அவதானிக்கலாம்.

- இந்து நாகரிகத்தின் மூல நூல்கள் சாத்திரமயப்படுத்தப்பட்டு, அமையப்பெற்ற சிறப்பு வாய்ந்தவை.
(உ-ம் : அரசியல் - அர்த்தசாத்திரம், பரதம்-பரத நாட்டிய சாத்திரம், சிற்பம்- சிற்பசாத்திரம்)

- இந்து தத்துவங்கள் வாழ்வியலை இணைத்துள்ள முறைமை மேலும் சிறப்பானது. சைவசித்தாந்தமானது, சமய வாழ்வியல் தத்துவமாகவும், அறிவியல், உளவியல் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.

- இந்து நாகரிகம் அறிவியல், வானியல், வைத்தியம் முதலிய துறைகளையும் உள்ளடக்கி இருப்பதால் உலகளாவிய பெருமையும் உண்டு.

- சனாதன தர்மமாக விளங்குகின்றது. மண்ணில் நல்லவண்ணம் வாழும் எண்ணங்களைப் பதிவுசெய்த இலக்கியங்கள் இந்து ரிஷிகளால் படைக்கப்பட்டுள்ளன.

- பிறர் நலம், பிறருக்கான பிரார்த்தனைகள், விருந்தோம்பல் உணர்வுகள் என்பன சமயத்தின், வாழ்வாதாரமாகவும், தர்மமாகவும் இந்துப் பண்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளன.

- பல்பண்பாட்டுச் சங்கமத்தை எடுத்துக்காட்டும் பெருமையும் இந்து நாகரிகத்திற்கு உண்டு. வடமொழிக் கலாசாரம், தமிழ்க் கலாசாரம் என்பவற்றின் பிணைப்பை அங்கு அவதானிக்க முடியும்.

- உலகளாவிய இலக்கியங்களிலே இசைப்பாடல் வடிவங்களை உள்ளடக்கிய சிறப்பும் இந்துப் பண்பாட்டிற்குண்டு. சைவத்திருமுறைகளிலும் ஏனைய தோத்திரங்களிலும் இச்சிறப்புக் காணப்படுகிறது.

- தமக்காக அன்றி பிறருக்காக உலக விடுதலைக்கான வேண்டுதல்களுக்கும் இந்து மதம் இடம் கொடுக்கின்றது.
(உ.ம்: ‘‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்’’ ‘‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’’ ‘‘வான்முகில் வழாது பெய்க…’’ ‘‘மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்’’)

- ‘‘வான்முகில் வழாது பெய்க…’’ என்னும் பாடலில் குறைவிலாது உயிர்கள் வாழ வழிகாட்டும் சைவநீதிக் கருத்துக்கள் பிரதானமானவையாகும்.

- பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்து நாகரிகம் ‘‘கடமையைச் செய் பயனை எதிர்பாராதே ‘‘ என்றும், ‘‘என்கடன் பணி

செய்து கிடப்பதே என்றும் பணிவான தொண்டை உயர் தொனியாகக் கொண்டுள்ளது.

- காலம் காலமாக வளர்ந்து வரும் கலைப்பண்பாட்டைக் கூறுவதுடன் கலை கலைக் காகவே என்பதை விட, கலை ஆன்மீக அனுபவத்திற்காகவே என்னும் தத்துவத்தையும் அழகியல் ரசனையையும் அரவணைத்துக் கொண்டுள்ளது.

- பிற மதக் கருத்துக்களை ஏற்றும் மதித்தும் போற்றும் தன்மை இந்து நாகரிகத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும். பல்கலாசாரத்திற்குள்ளும் இணைந்து தமது அடையாளத்தை வெளிப்படுத்துகிறது.

- ஆன்மீக விடுதலையாகிய முக்தி தத்துவத்தை இலக்காகக் கொண்டது.

- உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு உன்னதமானது.

- இவ் உலக வாழ்வை மட்டுமல்லாது, மறுமை உலக வாழ்வையும், இந்த உலக வாழ்வியலில் இருந்து விடுபடும் ஆர்வத்தைத் தூண்டும் சிறப்பும் முக்கியமானதாகும்.

- இந்து மதத்தை எந்த ஒருதனிமனிதனும் தோற்றுவிக்கவில்லை. அது தானாக தோன்றியது. மனிதன் உலகில் தோன்றி தன்னுணர்வு பெற்று, என்று இயற்கையை வணங்க ஆரம்பித்தானோ அன்றிலிருந்து இந்து மதம் உருவானது.

- சமயம், வழிபாடு, பக்தி, தத்துவம், ஒழுக்கம், கலை, வித்துவம், அறிவியல், இலக்கியங்கள் முதலிய பண்பாட்டின் பரிணாமங்களையும், நாகரிக நுண்ணுணர்வுகளையும் பெருமைப்படுத்துகின்ற சமயம் இந்து மதம்.

- இந்து தத்துவ மெய்யியலானது ஆன்மீகத்தன்மை கொண்டதெனும் சிறப்பினையுடையது. இந்து மெய்யியலில் ஒவ்வொரு தரிசனமும் சமயங்களாக மிளிர்ந்து வந்துள்ளமையும் கவனிக்கத்தக்கது,இந்து மெய்யியற் பரப்பில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி அனைத்திற்கும் அடிப்படையாகக் காணப்படுவது வேதவாக்குகளே என்ற சிந்தனையில் ஆழமான கருத்தைப் பதிக்கும் சமயம்.

- அவைதீக சமயங்களான பௌத்தம், சமணம் போன்ற சிந்தனைகளுக்கும், வைதீக சமயம் ஏற்கும் வேத உபநிடத இலக்கியங்களிளே அடிப்படையாக அமைந்தது என்பர். **உன்னி** (P.N Unni) **பரன்** (T.P.Paran) போன்றவர்கள் "வேத உபநிடதங்களின் பௌதீக அதீத, மெய்யியற் கருத்துக்களின்று வளரந்து இந்து சமயத்தினின்றும் பௌத்தம், சமணம், சீக்கியம் ஆகியன தோன்றின" எனக் கூறியுள்ளனர்

## ஆ) உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் பரவல்

இந்துப்பண்பாட்டின் ஆரம்ப நிலையை அவதானிக்கும் போது உலகின் பழைமையான நாகரிகங்களில் இந்துமத அடையாளம் இருந்தமைக்கான பல சான்றாதாரங்களை அறிய முடிகின்றது.

❖ **பாபிலோனியா நாகரிகம்**

- பாபிலோனியா நாகரிக காலத்தில் பாபிலோனியாவிற்கு மேற்கே காணப்பட்ட பகுதிகளில் ஆரிய மதக் கொள்கையும் சமஸ்கிருத மொழியும் இருந்தமைக்கான சான்றுகள் கூறப்பட்டுள்ளன.

- பாபிலோனியா நாகரிகம் மீது படையெடுத்த அரசர்வரிசையில் பாரசீகத்தினை ஆட்சி செய்த **"சைறஸ்"** என்பதை **விபுலானந்தர்** தனது **"மேற்றிசைச் செல்வம்"**என்னும் நூல் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு பாரசீக நாட்டிற்கும் பாபிலோனியா பிரதேசத்திற்கும் இடையில் இரண்டரை யோசனை தூரம் உள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

- பாபிலோனியாவில் வாழ்ந்த மக்கள் **வேல, வேல்** என்றழைக்கப்படும் தெய்வமொன்றை வழிபட்டதாக அறிய முடிகின்றது. அத்தோடு **சூரிய வழிபாடும்** பாபிலோனியா மக்களிடம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

- பாபிலோனியாவில் **சின், ஷாமஸ், உல்** என்னும் திரிமூர்த்திக் கொள்கை இருந்ததாகக்கூறப்பட்டுள்ளதோடு திரிமூர்த்திகளுக்கான கோயில்களும் காணப்படுகின்றன.

- சிவன் என்னும்பெயர் பாபிலோனியா மக்களால் பயன்படுத்தப்பட்டது. ஒருவருடத்தின் மூன்றாம் மாதம் சிவன் என அழைக்கப்பட்டது. தற்போதைய இந்து பஞ்சாங்க முறைப்படி மூன்றாம் மாதம் பங்குனி என்றும், இந்து தெய்வமாகிய சிவபெருமானுக்குரிய நட்சத்திரமாக பங்குனி உத்தரம் விளங்குவதும் கவனிக்கத்தக்கது.

- ஆங்கு வழிபடப்பட்ட திரிமூர்த்திக் கடவுளுக்குரிய வருணனைகளை குறிப்பிடும் போது இளம்பிறைச் சந்திரனை தலையில் சூடியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழிபாடு சிவவழிபாட்டுடன் தொடர்புபட்டதாக அமைகின்றது.

❖ **கிரேக்க யவன நாகரிகம்**

- கிரேக்க யவன நாகரிகத்திற்கும் இந்திய நாகரிகத்திற்கும் இடையில் மொழியியல் ரீதியான, பண்பாடு ரீதியான தொடர்பு இருப்பது ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

- பாபிலோனியா நாகரிகமானது இந்து தெய்வ வழிபாட்டின் மூலாதாரங்களை உடையதாக இருக்க பாரசீக நாகரிகமும் இன்றைய இந்துப் பண்பாட்டிற்கான நினைவுச் சின்னங்களை உடையதாக விளங்குகின்றது என **“மஜாம்தார்”** குறிப்பிட ்டுள்ளார்

.

- பாரசீகம் என்பது **சின்னாசியா** எனக் குறிப்பிடப்பட்டு வட இந்தியாவின் மேற்குப் பகுதியைக் குறிப்பிடுவது என கூறப்பட்டுள்ளது.

- ஆரிய கலாசாரத்தினது வைதீக நெறியினது தோற்றுவாயாகவும் மூலாதாரமாகவும் பாரசீக நாகரிகம் விளங்குகின்றது.

- மேற்படி பாபிலோனிய பாரசீக நாகரிகக் கருத்துக்கள் இந்திய நாகரிகத்துடன் தொடர்பு பட்டிருப்பதனை நோக்க முடிகின்றது. அதனால் உலக நாகரிக வரலாற்றில் இந்திய நாகரிகமும் முதன்மை பெறுகின்றது.

- இந்திய நாகரிகத்தின் ஆரம்ப கட்டமைப்பு சிந்து கங்கைச் சமவெளியுடன் தொடர்புடையது. இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன் சிந்து கங்கைச் சமவெளி நாகரிகங்கள் செல்வாக்கு பெற்றிருந்தன.

- வேதநெறி இந்தியாவில் பரவி வைதீக மார்க்கமாகப் பரவமுன்பே இந்து நாகரிக மரபு பரவி இருந்தமை அறியப்பட்டது. சிவ வழிபாட்டிற்கும் அம்மன் வழிபாட்டிற்குமான மூலங்களை இங்கு காண முடியும் தொல்பொருட் சின்னங்களைக் கொண்டு இந்துப் பண்பாடு பற்றிய விடயங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

- இந்திய நாகரிகம் சிந்துவெளி தொல்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றாலும் தொடர்ந்து இலங்கை, தென்கிழக்காசியா மக்களிடையேயும் இந்துப்பண்பாடு பரவும் நிலையை ஏற்படுத்தியது.

- இந்திய நாட்டைப் பொறுத்தவரை சிந்து வெளி நாகரிகம் வேத நாகரிகம், புராண இதிகாச கதை மரபுகள், வடஇந்திய வரலாறு, மத்திய இந்திய வரலாறு, தென்னிந்திய வரலாறு தென்னிந்தியாவில் கர்நாடகம், ஆந்திரா, கேரளா தமிழ்நாடு என விரிவு பட்டதாக இந்து நாகரிகத்தின் பல்பரிணாம வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது.

## ❖ தமிழக நாகரிகம்

- தமிழ்நாட்டு வரலாற்றை அவதானிக்கும் போது சங்க கால தமிழக நாகரிகம் சமஸ்கிருத தமிழ் கலாசாரக் கலப்புக்கள் அதற்கான இலக்கியச் சான்றுகள் என்பவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

- வட இந்திய ஆட்சியாளர் காலத்தில் தோன்றிய கோவில்கள் கல்வெட்டுக்கள் நாணயங்கள், சின்னங்கள், உருவங்கள் என்பவை இந்திய நாகரிகத்தின் பழைமையைப் பின்பற்றுவனவாக உள்ளன.

- இந்து நாகரிக கூடுகள் சங்ககாலம் தொடக்கம் இலங்கைப் பண்பாட்டுடன் தொடர்பு பட்டிருப்பதும் அறிய முடிகின்றது.

- பௌத்தம் இலங்கையில் வருகை தந்ததைத் தொடர்ந்து இந்தியத் தொடர்புகள் வலுவடைந்தன. இலங்கைப் பூர்வீகக் குடிகள் மீது இந்திய நாகரிக தொடர்புகள் வளர்ச்சியடைந்தன.

- இலங்கையின் பொலநறுவைக் காலம் தமிழக தொடர்புக்காலம் இலங்கை 9ஆம் மண்டலமாகவும் ஜனநாத மங்கலம் என்னும் பெயருடனும் விளங்கியது.

- சோழராட்சியிலே இலங்கை மட்டுமல்லாது தென்கிழக்காசிய நாகரிகங்களிலும் இந்துப் பண்பாட்டுப் பரவலை அவதானிக்க முடிகின்றது. அதன் மூலமாக இந்து பௌத்த பண்பாட்டுக் கலப்பு மேம்பட்டது. சிவ - புத்த வழிபாடும் முதன்மையடைந்தது.

- கட்டட சிற்பங்களில் இந்து பௌத்த உறவுகள் விரிவடைந்தன.

- தென்கிழக்காசியாவில் மலேசியா, கம்போடியா, பர்மா, தாய்லாந்து, யாவா, சுமத்திரா, போர்ணியோ முதலிய தீவுகளில் இந்துப் பண்பாடு பரவியமையை அவதானிக்கலாம்.

## ❖ ஐரோப்பிய நாகரிகம்

- அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாகரிகம் குடியேற்ற வாதமாகப் பரவலாயிற்று.அவ்வேளையில் ஐரோப்பிய நாடுகளுக்கும் இலங்கை இந்திய நாடுகளுக்குமிடையில் பண்பாட்டுத் தொடர்புகள் விரிவடைந்தன.

- கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூக பொருளாதர அபிவிருத்திக் கால கட்டத்தை அடியொற்றி மேலை நாடுகளில் இந்திய இலங்கை கலாச்சாரப் பரவல் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

- மக்கள் இனங்கள் கலாசாரங்கள், மதங்கள் என்பவற்றின் சேர்க்கையும் இணைப்பு பண்பாடு, நாகரிக வளர்ச்சியை புலப்படுத்தும் கண்ணாடிகளாக விளங்குகின்றன.

- அண்மைக்காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் உலக மயமாதல் என்பவற்றுக்கான அடிப்படையும் மனித விழுமியங்கள் பற்றிய சிந்தனையும் வளர்ச்சியடைந்து வந்திருப்பதனை அவதானிக்கலாம்.

- 1893இல் **சுவாமி விவேகானந்தர்** சிக்காக்கோ மகாநாட்டில் கலந்து கொண்டதைத் தொடாந்தும் அமெரிக்க மக்களை சகோதர சகோதரிகளே என விழித்து அழைத்ததைத் தொடர்ந்தும் மேலை நாட்டவருக்கு இந்துப் பண்பாட்டை அறியும் ஆர்வம் ஏற்பட்டது.

- 1895ல் இலண்டன் மாநகரில் சுவாமி விவேகானந்தர் ஞானயோக பிரசங்கங்களை மேற்கொண்டார். இதனாலும் மேலைத்தேய மக்களிடம் இந்து சமயப் பண்பாடு பற்றிய விளக்கம் ஏற்படத் தொடங்கியது.

- யோகமார்க்கம் பற்றிய உபதேசங்களே மேலைநாட்டவரால் விரும்பப்பட்டது. இதன் மூலம் மேலை நாட்டவர்கள் இந்து சமயநெறிக்கு யோகமார்க்கம், வாழும்கலை மார்க்கம், தியான மார்க்கம் எனப் புதிய விளக்கம் கொடுத்தனர். **"மக்ஸ்முல்லர்"** இதனை முதன்மைப்படுத்தினார்.

- **"போல் டியுசன"** என்பவர் உலக வேதாந்த மரபைப் பரப்புவதற்குப் பணிசெய்தார்.

- **"ஜீ.யு.போப்"** அவர்கள் சைவசித்தாந்த தத்துவத்தைப் பரப்புவதில் பங்களிப்புச் செய்தனர்.

- 1950களுக்குப் பிற்பட்ட காலத்தில் தென்னாசிய நாடுகளின் உள்நாட்டுப் போர் காரணமாக இலங்கையர் இந்தியர்கள் மேற்கு நாடுகளுக்குக் குடிபெயரும் நிலை ஏற்பட்டது. இதனால் மேலை நாடுகளில் வழிபாட்டுத் தலங்களை அமைக்கும் முயற்சிகள் இடம் பெற்றன.

- பல்லின கலாசாரத்தில் இந்து மதப் பண்பாடுகளின் சிறப்புப் பற்றிய விடயம் பரவலாயிற்று. ஆத்மீக விடயங்களில் காழ்ப்புணர்வைக் கைவிட்டு நல்ல விடயங்களில் கவனம் செலுத்தும் நிலை ஏற்பட்டது.

- கனடா பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி முதலிய நாடுகளில் இந்துக் கோவில்கள், இந்து கிரியைகள் செல்வாக்கு பெறும் நிலை ஏற்பட்டது. இந்திய இலங்கை நாடுகளைப் போலவே திருக்கோவில் வழிபாடுகள் திருக்கோயில் பூசை முறைகளும் விருத்தியடைந்தன.

- கனடா நாட்டில் **கந்தபுராண கலாசாரம்** செல்வாக்குப் பெறுகின்றது. இலங்கை, இந்திய சமய அறிஞர்கள் கந்த புராண கலாசாரத்தைப் புராண படனம் மூலம் பரப்பி வருகின்றனர்.

- **ரொறன்ரோ, மொன்றியல்** முதலிய நாகரிக வளர்ச்சி கண்ட நகரங்களிலும் இந்து நாகரிக அம்சங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. வடஅமெரிக்கா வரை மேலைத்தேய கலாசாரங்களில் இந்துப் பண்பாடு வளர்ச்சி பெற்றுள்ளது.

### கடந்த காலங்களில் இடம்பெற்ற வினாக்களும் அதன் விடைகளும்

## அலகு : உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் வகிபங்கு

## பகுதி 1

**1.”வைதிக நெறி” என்பதன் பொருள் யாது?**

1.புராணங்கள் போற்றும் தெய்வ நெறி
2.உபநிடதங்கள் கூறும் தத்துவ நெறி
3.பிரமசூத்திரம் கூறும் வாழ்வியல் நெறி
4.வேதங்களை அடிப்படையாகக் கொண்ட சமய நெறி
5.இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை நெறி

**வினா இலக்கம் 06 (2019)**

## விடை

4.வேதங்களை அடிப்படையாகக் கொண்ட சமய நெறி

**2. "என்கடன் பணி செய்து கிடப்பதே…"என்ற கோட்பாட்டை சாதனை வழியில் காட்டியவர்**

1.திருஞானசம்பந்தர் 2.திருநாவுக்கரசர் 3.சுந்தரமூர்த்தி நாயனார்
4. மாணிக்கவாசகர் 5. சேக்கிழார்

**வினா இலக்கம் 24 (2019)**

## விடை

2.திருநாவுக்கரசர்

**3.."உலக நாகரிகங்களுக்கு இந்து நாகரிகத்தின் பங்களிப்பு அளப்பரியது" எனக் குறிப்பிடப்படுவதற்கான காரணம் யாது?**

1.பண்டைக் காலந்தொட்டு ஏற்பட்ட அயல்நாட்டுத் தொடர்புகளாகும்
2.சமய வழிபாட்டு முறைகளின் பரம்பல், கலைகள் ,தர்மசாத்திரங்களின் செல்வாக்காகும்
3.உலகியலுக்கு வழங்கப்படும் முக்கியத்துவமாகும்
4.காவியங்களைக் கொண்டமைந்திருக்கின்றமையாகும்
5.அறிஞர்களின் பங்களிப்பாகும்

**வினா இலக்கம் 28 (2019)**

## விடை

2.சமய வழிபாட்டு முறைகளின் பரம்பல், கலைகள் ,தர்மசாத்திரங்களின் செல்வாக்காகும்

**பொருந்தாததைத் தெரிவு செய்க**

**4. இந்து நாகரிகத்தின் தனித்துவமும் சிறப்பும்**

1.உலக, நாகரிகங்களின் வரிசையில் இந்து நாகரிகம் புகழ் பெற்றது
2.இந்து நாகரிகத்தின் தொன்மைக்கு வேத, இலக்கியங்களே சான்றாகும்.
3.இந்து நாகரிகம் சமயம், தத்துவம், கலை, சமூகம், அறிவியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய சிறப்புடையது
4.இந்து நாகரிக வரலாற்றில் இந்துக்களின் அரசியல் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகும்
5.இந்து நாகரிகம் திருக்கோயில் பண்பாட்டின் சிறப்பினைக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்

**வினா இலக்கம் 41 (2018)**

## விடை

4.இந்து நாகரிக வரலாற்றில் இந்துக்களின் அரசியல் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகும்